# QB365 Question Bank Software Study Material

## பன்னாட்டுப் பொருளாதார அமைப்புகள் முக்கியமான 2,3 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 12ம் வகுப்பு

## பொருளியல்

மொத்த மதிப்பெண் : 75

**2 மதிப்பெண் வினாக்கள்**

10 x 2 = 20

1) சிறப்பு எடுப்புரிமைகள் என்பதன் பொருளை எழுதுக.

**பதில் :** 1. தாள் தங்கம் என்று அழைக்கப்படும் சிறப்பு எடுப்புரிமைகள் (SDRs) எனும் திட்டத்தை நிறுவியதில் நிதியம் வெற்றி பெற்றுள்ளது.
2. பன்னாட்டு பண நிதியத்துடன் கையிருப்பாக உள்ள உறுப்பினர் நாடுகளின் பணமே சிறப்பு எடுப்புரிமையாகும்.

2) ஆசியானின் இரண்டு நோக்கங்களைக் குறிப்பிடுக.

**பதில் :** 1. பொருளாதார வளர்ச்சி, சமூக வளர்ச்சி, பண்பாட்டு மாற்றம் ஆகியவற்றை விரைவுப்படுத்துவது.
2. ஐ.நா சபையின் கொள்கைகளைக் கடைபிடித்து தென்கிழக்காசிய பகுதியில் அமைதி மற்றும் உறுதியான அரசியல் சூழ்நிலையை மேம்படுத்துவது.

3) ஐபிஆர்டி யின் ஏதேனும் இரண்டு கடன் திட்டங்களின் பெயர்களைச் சுட்டிக்காட்டுக.

**பதில் :** 1. வங்கியின் இருப்பில் உள்ள சொந்த நிதியிலிருந்து கடன் வழங்குவது.
2. கடன் நிதியிலிருந்து கடன் வழங்குவது.

4) பொது அங்காடி வரையறு

**பதில் :** புவியின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் அமைந்துள்ள நாடுகள் தடையற்ற வாணிகத்துக்காவும் உற்பத்திக் காரணிகள் இடப்பெயர்வுக்காகவும் அமைக்கும் அமைப்பே பொது அங்காடி.
(எ.கா): ஐரோப்பிய பொது அங்காடி

5) தடையற்ற வாணிகப் பகுதி என்றால் என்ன?

**பதில் :** ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட உறுப்பினர் நாடுகள் அனைத்தும் ஒரே மண்டலமாகக் கருதி வாணிகத்தடைகளைக் குறைக்க ஒத்துழைக்கும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே ஒப்பந்தம் போடப்படுகிறது.
எ.கா : SAFTA, EFTA

6) எங்கு, எப்பொழுது சார்க் தலைமை அலுவலகம் துவக்கப்பட்டது?

**பதில் :** சார்க் தலைமை அலுவலகம் நேபாள தலைநகரத்தின் காட்மண்டில் ஜனவரி 16, 1987இல் செயல்படத் துவங்கியது.

7) உலக வங்கிக் குழுமத்தின் கீழ் செயல்படும் இரண்டு துணை நிறுவனங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

**பதில் :** 1.பன்னாட்டு மேம்பாட்டு அமைப்பு (IDA)
2. பன்னாட்டு நிதிக் கழகம் (IFC)

8) உலக வங்கியின் உறுப்பினர்கள் எண்ணிக்கை பற்றி எழுதுக.

**பதில் :** (i) உலக வங்கி தொடங்கிய ஆண்டில் 30 ஆக இருந்த உறுப்பினர் எண்ணிக்கை 1960ல் 68 ஆகவும், 1988 ல் 151 நாடுகளாகவும் அதிகரித்தது.
(ii) தற்பொழுது 189 நாடுகள் உலக வங்கியின் உறுப்பினர்கள் (நவ்ரு குடியரசு கடைசியாக சேர்ந்தது).

9) உலக வர்த்தக மையம் - சிறு குறிப்பு வரைக.

**பதில் :** (i) உலக வர்த்தக மையம் (WTO) என்பது அமெரிக்காவில் உள்ள நியூயார்க்கை தலைமையாக கொண்டது.
(ii) இரட்டை கோபுரங்கள் என்று அழைக்கப்பட்ட அது ஏப்ரல்4,1973ல் தொடங்கப்பட்டது.
(iii) செப்டம்பர் 11,2001 அன்று விமான தாக்குதலால் அழிக்கப்பட்டது.
(iv) உலகம் முழுவதும் பன்னாட்டு வாணிபத்தில் ஈடுபடும் வணிகங்களை அது ஒன்று சேர்க்கிறது.

10) ஏசியான் விவாதத்தில் கலந்து கொள்ளும் நாடுகள் யாவை?

**பதில் :** *சீனா, ஜப்பான், இந்தியா, தென்கொரியா, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா.*

## 3 மதிப்பெண் வினாக்கள்

10 x 3 = 30

11) வாணிக ஒத்துழைப்புத் தொகுதிகள் என்றால் என்ன ?

**பதில் :** 1. சில நாடுகள் வாணிகத்தில் போட்டியைத் தவிர்க்க பிற நாட்டுப் பொருளாதாரத்துடன் தங்களுடைய பொருளாதாரத்தை இணைத்து புதிய வாணிக வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்கின்றன.
2. நாடுகளுக்கிடையே சுமூக நன்மை தரும் வாணிகத் தொகுதிகள் பல விதங்களில் அமைகின்றன.
3. சமூக நன்மைக்காக நாடுகள் அமைக்கும் வாணிகத் தொகுதிகள் பரஸ்பர நல்லிணக்கத்திற்கு உதவுகிறது.

12) ஐஎம்எப் -ன் கடன் வழங்கும் திட்டங்களில் ஏதேனும் மூன்றினைக் குறிப்பிடுக.

**பதில் :** **அடிப்படைக் கடன் வசதி :** ஒரு உறுப்பினர் நாடு நிதியத்தில் அது பராமரிக்கும் மூலதனப் பங்குத் தொகையில் 25 விழுக்காடு அளவுக்கு நிபந்தனையற்ற கடன் பெறுவதையே அடிப்படைக் கடன் என்கிறோம். இந்த நிபந்தனையற்றக் கடன் வாங்கும் உரிமை கையிருப்பு பகுதி என அழைக்கப்படுகிறது.
**விரிவாக்கப்பட்ட நிதி வசதி :** உறுப்பு நாடுகள் தங்களின் மூலதனப்பங்குத் தொகையில் 140 விழுக்காடு அளவுக்கு அடிப்படைக் கடன் தொகைக்கு மேல் அதிகமாக கடன் பெற அனுமதிப்பதே விரிவாக்கப்பட்ட கடன் திட்டம்.
**ஈடு செய் நிதி வசதி :** நிதியம் 1963 ஆம் ஆண்டில் ஈடு செய்கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. குறைவான ஏற்றுமதி வருவாய் ஈட்டும் முதன்மைத் துறை பண்ட உற்பத்தியைச் சார்ந்திருக்கும் நாடுகளுக்கான தனிப்பட்ட கடன் திட்டமே ஈடு செய் கடன் திட்டமாகும்.

13) பல தரப்பு ஒப்பந்தம் என்றால் என்ன ?

**பதில் :** 1. வங்கி, காப்பீடு, போக்குவரத்து, தொலைத்தொடர்பு, ஆகிய பணிகளில் பன்னாட்டு வாணிகம் நடைபெறுவதற்குத் தேவையான சாதகமான விதிகளை முதன்முதலில் தொகுத்துக் கொடுத்த முதலாவது, பல தரப்பு பன்னாட்டு ஒப்பந்தமாகும்.
2. காட் ஒப்பந்தத்தில் உறுப்பினர் நாடுகள் தாங்கள் விரும்பும் நாடுகளுக்கு மிகவும் சாதகமான நாடு (MFN) எனும் சலுகையை வழங்க அனுமதித்தது.
3. பணிகள் வாணிக ஒப்பந்தத்தில் ஒரு நாட்டுக்கு சாதகமான நாடு என சலுகை வழங்கினர்.
4. அந்தச் சலுகைகளை அனைத்து நாடுகளுக்கும் வழங்க வேண்டும் என்று ஒப்பந்த விதி திருத்தியமைக்கப்பட்டது.

14) பிரிக்ஸ் மாநாடு 2018 இன் நிகழ்ச்சி நிரல் பற்றி எழுதுக

**பதில் :** பத்தாவது உச்சி மாநாடு தென் ஆப்பிரிக்காவில் ஜூலை 2018 ஆம் ஆண்டில் நடைபெற்றது.
1. உள்ளடக்கிய வளர்ச்சி
2. வாணிகச் சிக்கல்கள்
3. உலகளாவிய அரசு நிருவாகம்
4. பகிரத்தக்க வளமை
5. நாடுகளின் அமைதி மற்றும் பாதுகாப்பு ஆகியவையே இந்த உச்சி மாநாட்டின் விவாதத் தலைப்புகள் ஆகும்.

15) சார்க்கின் பணிகளைச் சுருக்கமாகக் கூறுக.

**பதில் :** சார்க்கின் பணிகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.
1. தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பை பராமரித்தல்.
2. உறுப்பினர் நாடுகளின் பொதுவான சிக்கல்களுக்கு தீர்வு காணுதல்.
3. உறுப்பினர் நாடுகளிடையிலான உறவை மேம்படுத்துதல்.
4. வறுமை ஒழிப்புத்திட்டங்கள் மூலம் ஏழ்மையை ஒழிப்பது.
5. பயங்கரவாதச் செயல்களைத் தடுப்பது.

16) பொருளாதார ஒருங்கிணைப்பின் பல்வேறு வடிவங்களைக் குறிப்பிடுக.

**பதில் :** தடையற்ற வாணிகப் பகுதி, சுங்கத்தீர்வை ஒன்றியம் பொது அங்காடி, பொருளாதார ஒன்றியம் ஆகிய வடிவங்களில் பொருளாதார ஒருங்கிணைப்பு நிகழ்கிறது.

**தடையற்ற வாணிகப் பகுதி :**

ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட உறுப்பினர் நாடுகள் அனைத்தும் ஒரே மண்டலமாகக் கருதி வாணிகத்தடைகளைக் குறைக்க ஒத்துழைக்கும்.

(எ.கா): SAFTA, EFTA

**சுங்கவரி ஒன்றியம் :**

உறுப்பினர்களுக்கு இடையிலான வாணிகத்தில் வரி விதிக்காமலும் உறுப்பினர் அல்லாதவர்களுடனான வாணிகத்தில் பொது வரிவிதித்தும் ஒத்துழைக்கும் அமைப்பே சுங்கவரி ஒன்றியம் எனப்படுகிறது.

(எ.கா): BENELUX

**பொது அங்காடி :**

புவியின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் அமைந்துள்ள நாடுகள் தடையற்ற வாணிகம் மற்றும் உற்பத்திக் காரணிகள் இடப்பெயர்வுக்காகவும் அமைக்கும் அமைப்பே பொது அங்காடி.

(எ.கா): ஐரோப்பிய பொது அங்காடி.

**பொருளாதார ஒன்றியம் :**

பொது அங்காடியையும் சுங்கவரி ஒன்றியத்தையும் ஒன்றிணைத்து உருவாக்கப்படும் அமைப்பே பொருளாதார ஒன்றியம்.

பண்டங்கள் உற்பத்தி, பணிகள் உற்பத்தி, பண்டங்கள், பணிகள், காரணிகள் இடம்பெயர்வு பொதுவான உறுப்பினரல்லாத நாடுகள் வாணிகத்தின் மீது வரி ஆகிய அனைத்தும் பொருளாதார ஒன்றியத்தில் இடம்பெறும்.

(எ.கா) -ஐரோப்பிய பொருளாதார ஒன்றியம்.

17) பிரிக்ஸ் அமைப்பின் சாதனைகளைப் பட்டியலிடுக.

**பதில் :** 1. அவசரகால கையிருப்பு வசதியை உருவாக்கியதால் உறுப்பினர் நாடுகளின் பொருளாதார மற்றும் நிதித் துறைகளில் ஒன்றிணைந்து செயல்படுதலை பலப்படுத்தியது ஒரு சாதனையாகும்.

2. ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் உலக வங்கி முதலான செயல்படும் புதிய வளர்ச்சி வங்கியை சீனாவின் சாங்காயில் தலைமை அலுவலகத்துடன் செயல்படும் விதமாக பிரிக்சின் ஆறாவது மாநாட்டின் முடிவு செய்தபடி அமைத்தது ஒரு சாதனை.

3. பொருளாதார பலமும் மக்கள் தொகை வளமும் பிரிக்ஸ் நாடுகள் உலக அளவில் பன்னாட்டு உறவு நிர்வாகத்தில் கூடுதல் ஆதிக்கம் பெறும் நிலைமை பெற்றுள்ளது.

18) ஆசியாவின் அமைப்பின் சாதனைகளைப் பட்டியிலிடுக.

**பதில் :** 1. ஆசியாவின் உறுப்பினர் நாடுகளுக்கிடையே தடையற்ற பொருள், பணிகள், மூலதன போக்குவரத்து உருவாக்கியது.

2. உறுப்பு நாடுகளின் வணிகப் போராட்டத்திறனை மேம்படுத்துவது மற்றும் பொருளாதார மேம்பாட்டு இடைவெளியை குறைப்பது.

3. வாணிக தடைகளற்ற அனுமதி வழங்குவது.

4. உறுப்பு நாடுகளுக்கு சந்தை மற்றும் முதலீடு வாய்ப்புகளை வழங்குவது.

5. தொழில் மற்றும் வணிகம் உள்ளிட்ட பல துறைகளில் ஒத்துழைப்பை வளர்த்தல்.

19) ஆசியானின் பணிகள் யாவை?

**பதில் :** 1. உறுப்பு நாட்டு விற்பனையாளர் மற்ற உறுப்பு நாடுகளில் விற்க தடையற்ற அனுமதி.

2.உறுப்பு நாடுகளின் வணிக நிறுவனங்களின் போட்டித் திறனை மேம்படுத்துவது.

3. ஐரோப்பிய ஒன்றியம் போன்று ஒரே சந்தையாக செயல்படுத்தல்.

4. உறுப்பு நாடுகளுக்கு சந்தை மற்றும் முதலீட்டு வாய்ப்புகளைப் பெற்றுள்ளது.

5. தொழில் மற்றும் வணிகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு.

20) இந்தியா மற்றும் பன்னாட்டு பண நிதியம் குறிப்பு வரைக.

**பதில் :** (i) இந்தியா ஒத்துழைப்பை நிதியத்தின் ஐந்தாவது : பெரிய - உறுப்பு நாடாக 1970 வரை இடம் பிடித்திருந்தது.

(ii) ஒரு நிரந்தர செயல் இயக்குநரை நியமிக்கும் பெற்றுள்ளது.

(iii) நிதியத்திலிருந்து பல உதவிகள் பெற்று  கடன் தவணைகளை ஒழுங்காக கட்டி வருகின்றது. மில்லியன் டாலர்.

(iv) உ. அதிக அளவு 89% பங்களவு, உள்ள நாடுகளில் இந்தியா 13 வது உறுப்பு நாடாகவும் நிதியத்தின் மொத்த பங்களவில் 2.44% பங்குகளையும் கொண்டுள்ளது.

(v) அயல்நாட்டுச் செலுத்துநிலை பற்றாக் குறையை சரிசெய்வதற்கு கடன்கள் . பெறுவதோடு இந்தியா பிறவழிகளிலும் நிதி உதவியை உறுப்பினர் என்ற முறையில் பெற்று பயனடைகிறது.

## 5 மதிப்பெண் வினாக்கள்

5 x 5 = 25

21) பன்னாட்டுப் பணநிதியத்தின் நோக்கங்களை விளக்குக

**பதில் : பன்னாட்டு பண நிதியத்தின் குறிக்கோள்கள் :**

1. உறுப்பு நாடுகளிடையே பன்னாட்டுப் பரிமாற்றத்தில் பணவியல் ஒத்துழைப்பை மேம்படுத்துவது.
2. பன்னாட்டு வணிகம் வேகமாகவும் சமச்சீராகவும் வளர உதவுவது.
3. உறுப்பு நாடுகள் போட்டிபோட்டுக் கொண்டு பண மதிப்பிறக்கம் செய்வதைத் தடுத்து நாணய மாற்று விகிதம் நிலையாக இருக்கச் செய்தல்
4. உறுப்பு நாடுகள் விதிக்கும் செலாவணிக் கட்டுப்பாடுகளை குறைத்தல் அல்லது நீக்குதல்
5. இருதரப்பு வாணிக ஒப்பந்தங்களுக்குப் பதிலாக அனைத்து நாடுகளுக்கிடையிலான பலதரப்பு நடப்புக் கணக்கு மற்றும் பண பரிமாற்ற முறை ஆகியவற்றை நிறுவுவது.
6. வளர்ந்த நாடுகள் வளரும் நாடுகளில் மூலதனம் செய்வதை எளிதாக்குவதன் மூலம் வளரும் நாடுகளின் உற்பத்தி வளங்களையும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துவது.
7. பன்னாட்டு நீர்மை சிக்கலுக்குத் தீர்வு காண்பது.

22) உலக வங்கியின் பணிகளை வெளிக் கொணர்க

**பதில் : உலக வங்கியின் பணிகள் :** உறுப்பு நாடுகளின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு கடன் வழங்கும் பணியை உலக வங்கி செய்கிறது. இதற்காக நீண்ட கால கடன்களை வழங்குகிறது.

உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் முதலீட்டுக்கான கடன் உதவி:

உற்பத்திக்குக் கடன் முதலீடு வழங்கும் திட்டத்தின் மூலம் உறுப்பு நாடுகளின் நில எல்லைக்குட்பட்ட பகுதிகளின் மறுகட்டமைப்புக்கும் மேம்பாட்டுக்கும் உதவி செய்யும் பணியை உலக வங்கி செய்கிறது.

**பன்னாட்டு வாணிகத்தின் சரிவிகித வளர்ச்சி:**

1. பன்னாட்டு கடன் மூலதனம் வழங்கி உறுப்பு நாடுகள் அனைத்தும் சரிவிகித பன்னாட்டு வணிக நீண்டகால வளர்ச்சியடைய உதவும் பணியை வங்கி செய்கிறது.
2. இதன் விளைவாக உறுப்பு நாடுகளின் அயல்நாட்டுச் செலுத்துநிலை சமநிலையை அடையும்.

**கடன் மற்றும் ஈட்டுறுதி வழங்குதல் :**

முக்கியமான திட்டங்களுக்கு கடன் வழங்குவது, பிற வழிகளில் கடன் பெற ஈட்டுறுதி வழங்குவது ஆகிய பணிகளையும் வங்கி செய்கிறது.

**வெளிநாட்டுத் தனியார் முதலீட்டிற்கு ஊக்கமளித்தல்:**

1. தனியார் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மூலம் உலக வங்கியின் உறுப்பு நாடுகளுக்கு கடன் வழங்க ஈட்டுறுதிகள் வழங்கும் பணியைச் செய்து வெளிநாட்டு மூலதனத்துக்கு ஊக்கமளிக்கிறது.
2. இந்தப் பணியின் மூலம் தனியார் மூலதனத்துடன் ஒன்று சேர்ந்து சொந்த நிதியிலிருந்து மட்டும் கடன் வழங்காமல் கடன் நிதியிலிருந்தும் கடன் வழங்க முடிகிறது.

**தொழில்நுட்ப பணிகள் :**

உலக வங்கி வாஷிங்டனில் அமைந்துள்ள பணியாளர் கல்லூரி நிபுணர்களைக் கொண்டு தொழில்நுட்ப ஆலோசனைகளையும் உறுப்பு நாடுகளுக்கு வழங்குகிறது.

23) இந்திய சமூக பொருளாதார மேம்பாட்டில் டபிள்யூடிஓ -ன் பங்கினை விவாதிக்க.

**பதில் : இந்தியாவும் பன்னாட்டு வாணிக அமைப்பும்:-**

1. பன்னாட்டு வாணிக அமைப்பு செயல்படத் தொடங்கிய ஆண்டிலிருந்தே இந்தியா அதன் உறுப்பு நாடாகும்.
2. பலதரப்பு விவாதங்கள் மூலமாக தீர்வுகள் காண்பதற்கு இந்தியாவின் ஆதரவு எப்பொழுதுமே உண்டு.
3. பன்னாட்டு வாணிக நிறுவனத்தின் உறுப்பினரானதால் இந்தியாவுக்கு கீழ்க்காணும் விதங்களில் நன்மைகளைப் பெற்றுள்ளது.

**நன்மைகள்:**

1. இறக்குமதி வரி குறைக்கப்பட்டதால் இடு பண்டங்கள், உதிரி பாகங்கள், இயந்திரங்கள் ஆகியன இந்தியாவுக்குக் குறைவான விலையில் அதிகமாக கிடைத்துள்ளன.
2. நாடுகளுடன் தனித்தனியே ஒப்பந்தம் போடாமல் பல நாடுகளில் இந்தியா பண்டங்களை விற்பனை செய்ய முடிகிறது.
3. குறைந்த செலவில் உயர்வகை தொழில்நுட்பம் கிடைத்துள்ளது.
4. பன்னாட்டுப் பரிமாற்றம் தொடர்புள்ள புகார்களுக்கு எளிதில் தீர்வு கிடைக்கும் நிலை உருவாகியுள்ளது.
5. பரந்த அங்காடி தகவலிலிருந்து இந்திய ஏற்றுமதியாளர்கள் பலனடைகின்றனர்.

24) குறிப்பு எழுதுக.

அ) சார்க்

ஆ) ப்ரிக்ஸ்

**பதில் : அ) தெற்காசிய நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பு சங்கம் - சார்க் :-**

1. தெற்காசிய நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்புக்காக துவக்கப்பட்ட அமைப்பு தெற்காசிய மண்டல ஒத்துழைப்பு அமைப்பு ஆகும்.

2. இந்த நாடுகளின் பொருளாதார சமூக, பண்பாட்டு ஒத்துழைப்பு, வளர்ச்சிக்காகவும், மற்ற வளரும் நாடுகளுடன் நட்புறவை வளர்த்துக் கொள்ளவும் டிசம்பர் 8, 1985ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.

3. வங்காளதேசம், பூட்டான், இந்தியா, மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை ஆகிய ஏழு நாடுகள் இதன் உறுப்பு நாடுகளாகும்.

4. ஒப்பந்தத்தில் உறுப்பினர் நாடுகள் ஏற்றுக்கொண்ட பிரிவுகளில் ஒத்துழைப்பு கொடுத்து ஒன்று சேர்ந்து செயல்பட்டு பொருளாதார, சமூக மேம்பாடு அடைவதே சார்க் அமைப்பின் அடிப்படை குறிக்கோள்.

5. முதல் உச்சி மாநாடு வங்காளதேசம் தலைநகரம் தாக்காவில் 1985 இல் நடைபெற்றது. இரண்டாண்டுக் கொருமுறை உச்சி மாநாடு நடைபெறுகிறது.

6. 20ஆவது உச்சி மாநாடு இலங்கையில் 2018 ஆம் ஆண்டில் நடைபெற்றது.

**ஆ) பிரிக்ஸ் நாடுகள்:**

1. வேகமாக வளர்ந்து வரும் நாடுகளின் முதல் எழுத்துக்களைக் கொண்டு குறிப்பிடப்படும் சுருக்கப்பெயர் பிரிக்ஸ்.

2. பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, மற்றும் தென் ஆப்பிரிக்கா, ஆகியவையே அதன் ஐந்து விரைவாக வளர்ந்து வரும் நாடுகள்,

3. இது 2010 ஆம் ஆண்டு வரை தென் ஆப்பிரிக்காவை உள்ளடக்காமல் பிரிக் என்று அழைக்கப்பட்டது.

4. பிரிக் என்ற சுருக்கப் பெயர் 2001ல் பயன்பாட்டுக்கு வந்தது.

5. பத்தாவது உச்சி மாநாடு தென் ஆப்பிரிக்காவில் ஜூலை 2018 ஆம் ஆண்டில் நடைபெற்றது.

6. உள்ளடக்கிய வளர்ச்சி, வாணிகச் சிக்கல்கள், உலகளாவிய அரசு நிருவாகம், பகிரத்தக்க வளமை, நாடுகளின் அமைதி மற்றும் பாதுகாப்பு ஆகியவையே இந்த உச்சி மாநாட்டின் விவாதத் தலைப்புகள் ஆகும்.

25) இந்தியாவும் உலக வங்கியும் குறிப்பு வரைக.

**பதில் :** (i) இந்தியா உலக வங்கியின் அதிகார பூர்வ பெயரான IBRD என்ற பெயரை வரைவு குழுவுக்கு முதலில் பரிந்துரை செய்தது.

(ii) அன்றிலிருந்து பொருளாதார வங்கி நெருக்கமாக உள்ளது.

(iii) இந்தியாவுக்கு பல மேம்பாட்டு திட்டங்களை படுத்தக் கடன் தந்தது.

(iv) உள் கட்டமைப்பு திட்டங்களான மின்னாற்றல், போக்குவரத்து, தகவல் தொடர்பு, நீர்ப்பாசனம் மற்றும் இரும்பு எஃகு போன்றவற்றை சொல்லலாம்.

(v) உலக வங்கியின் துணை நிறுவன மாக பன்னாட்டு நிதிக் கழகம்  முன்னுரிமை பகுதிகளை அடையாளம் காட்டியது - செயல் மூலதன சந்தை மேம்பாடு, வெளிநாட்டு  வெளிநாட்டு  முதலீடு, சந்தை நுழைவு, வாய்ப்புகள், புதிய மற்றும். வேகமாக வளர்ந்து வரும் நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்தல் மற்றும் உள்கட்டமைப்புத் துறை பகுதிகளாகும். நேரடி பொருளாதார  இந்தியாவில் கொள்கைகளை வடிவமைப்பதிலும் அவற்றை செயல்படுத்த கடன் வழங்குவதிலும் உலக வறுமையைப் போக்கவும் பொருளாதார மேம்பாட்டை அடையவும் உலக வங்கி  இந்தியாவுக்கு கடன் வழங்கியது.

(vi) 1980 ல் சீனா உலக வங்கியின் உறுப்பினராகும் வ்ரை இந்தியா உலக வங்கியால் பலனடைந்த நாடுகளில் முதலிடத்திலிருந்த நாடு ஆகும்.